ஓம்



# ஸ்ரீ சரஸ்வதி சங்கம்

(ஸ்தாபிதம் 1922.)

# ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை

(ஸ்தாபிதம் 1933.)

## சங்கம் 19-வது ஆண்டு
## வித்தியாசாலை 9-வது ஆண்டு
## அறிக்கைகள்.

அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிர நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி.
ஆங்கோ ரேழைக் கெழுத்தறிவித்தல்

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்!
ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர்!

மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்!
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்!
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!

விஷு ௵ சித்திரை 25. 7—5—1941.



# இண்டோ பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் லிமிடெட்,

**Dealers in B. B. T. C. Ltd., Productions,**

**I. B. T. C. L. பில்டிங்ஸ்,**

## செக்காலைரோடு, காரைக்குடி.

---

### டிப்போக்கள்:—காரைக்குடி & தொண்டி.

எங்களிடம் கட்டிடங்களுக்கு வேண்டிய எல்லாவிதமான, பம்பாய் பர்மா கம்பெனி (லிமிடெட்) தேக்கு மரங்கள், சைஸ் ரீப்பர்கள் வகையறாவும், ஓடு, சதுரக் கற்களும் ஸ்டாக் இருக்கிறது. கட்டிட ஆர்டர்களுக்கு குறித்த நேரத்தில் சப்ளை செய்யக்கூடும்.


வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்பெறும்.

பொதுஜனங்களின் ஆதரவைப் பெரிதும் விரும்புகிறோம்.

★ ஸ்டார் மார்க் ஓடு, சதுரக்கற்களின் சோல் ஏஜண்டு

தொண்டியிலும் ஏராளமான மரங்கள் ஸ்டாக் இருக்கின்றன

| | |
|---|---|
| **P.S. மணி அய்யர்,** | **SN.VR.CT. சின்னஞ் செட்டியார்** |
| தபாக்ஷ். | மானேஜிங் டைரெக்டர். |



புதுவையில் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் எட்டாவதாண்டு ஆசிரியர்கள், மாணவ மாணவிகள்.

ஓம்
வந்தேமாதரம்

புதுவயல்

# ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின்

## பத்தொன்பதாவதாண்டு

# அறிக்கை.

அன்பிற் சிறந்த அவைத்தலைவரவர்களே!
செந்தமிழ்ச் செல்வர்களே!!
செல்விகளே!!!

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் நமது சங்கம் துந்துபி ஆண்டு ஆடித்திங்கள் 9-ம் நாள் (24—7—1922) நிறுவப்பெற்று இதன் முக்கிய கொள்கைகளான இளைஞர் முன்னேற்றம், கல்வி வளர்ச்சி, கதர் அபிவிர்த்தி, ஜீவகாருண்யம் ஆகியவற்றின் வளர்ச்சி கருதி பத்தொன்பது ஆண்டுகளாகத் தொண்டாற்றி வந்துள்ள நமது சங்கத்திற்கு இன்று இருபதாம் ஆண்டு ஆரம்பமாகின்றது.

| | | |
|---|---|---|
| தலைவர், | திருவாளர், | பழ. முத்துவள்ளியப்பன். (ரெங்கூன்.) |
| காரியதரிசி, | ,, | மெ. சிதம்பரம். |
| உப-காரியதரிசி | ,, | சே. பழநியப்பன். |

# அங்கத்தினர்கள்.

---

1 திருவாளர் சா. சிதம்பரம் செட்டியார் (பினங்கு)
2 ,, பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார் (சயிலா)
3 ,, சித. இராமசாமி செட்டியார் (சிரம்பான்)
4 ,, வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார்
5 ,, வீர. பழநியப்ப செட்டியார்
6 ,, ராம. சுப. அடைக்கப்ப செட்டியார்
7 ,, வீர. சோலையப்ப செட்டியார் (டேரியா)
8 ,, வீர. பழ. விருத்தகிரி செட்டியார்
9 ,, பழ. ப. ப. வீர. வீரப்ப செட்டியார்
10 ,, மெ. கரு. அண்ணாமலை செட்டியார்
11 ,, அ. நாகப்ப செட்டியார் (தையக்கோன்)
12 ,, அ. சு. பழ. சு. சோம. இராமநாதன் செட்டியார்
13 ,, மு. மு. அழ. அழகப்ப செட்டியார்
14 ,, பெ. ப. சி. அரு. இராமசாமி செட்டியார்
15 ,, பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார்
16 ,, அரு. ப. மு. வீர. அண்ணாமலை செட்டியார் (கிமந்தான்)
17 ,, எ. ராம. வீர. பழ. முத்துவள்ளியப்ப செட்டியார் (ரெங்கூன்)
18 ,, VR. இராமநாதன் செட்டியார்
19 ,, கா. குழ. ராம. வீர. இராமசாமி செட்டியார்
20 ,, லெ. இராமநாதன் செட்டியார் (பியூ)
21 ,, பெ. க. வீர. நாராயணன் செட்டியார்
22 ,, V. இராமசாமி செட்டியார் (சென்னை)
23 ,, அ. அழ. அண்ணாமலை செட்டியார்
24 ,, சே. பழநியப்ப செட்டியார்
25 ,, கா. அருணாசலம் செட்டியார்
26 ,, மெ. நடேசன் செட்டியார் (ஈந்தட்டா)
27 ,, சோம. தியாகராஜன் செட்டியார் (காரைக்குடி)
28 ,, சுப. வீரப்ப செட்டியார்

29 ,, பழ. ராம. அருணாசலம் செட்டியார்
30 ,, மு. ராம. இராமனாதன் செட்டியார்
31 ,, எ. அ. ப. வீர. பழநியப்ப செட்டியார்
32 ,, உ. ராம. பெ. ராம. இராமனாதன் செட்டியார்
33 ,, சித. ராம. குமரப்ப செட்டியார் (ஈந்தட்டா)
34 ,, எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார்
35 ,, செ. சு. கதி. சுப்பையா செட்டியார் (சூப்பிங்கான்)
36 ,, மெ. சிதம்பரம் செட்டியார்
37 ,, அ. மு. வீர. கதி. வீரப்ப செட்டியார்
38 ,, கு. செ. மு. பெரி. காசிவிஸ்வநாதன் செட்டியார்
39 ,, சு. வீர. மெ. வீரப்ப செட்டியார்
40 ,, மு. ராம. சாத. சாத்தப்ப செட்டியார்
41 ,, மு. உ. வீரப்ப செட்டியார்
42 ,, கு. ராம. வீரப்ப செட்டியார்
43 ,, ப. வடு. வி. நா. வீரப்ப செட்டியார்
44 ,, அ. இராமசாமி செட்டியார் (ஈப்போ)
45 ,, சுப. சித. லெட்சுமணன் செட்டியார்
46 ,, லெ. வீரப்ப செட்டியார் (மூவார்)
47 ,, மெ. சொ. வீரப்ப செட்டியார்
48 ,, வீர. சுப. சு. கா. முத்துச் செட்டியார்
49 ,, பெ. ப. வி. பழ. இராமசாமி செட்டியார்
50 ,, அ. வயி. ராம. சின்னக்கருப்பன் செட்டியார்
51 ,, ப. உ. கு. உ. அண்ணாமலை செட்டியார் (கிள்ளான்)
52 ,, அரு. உ. வீர. அழகப்ப செட்டியார் (மீன்லா)
53 ,, மெ. வீர. வெ. நடேசன் செட்டியார்
54 ,, ராம. வெ. ராம. வெங்கிடாசலம் செட்டியார்
55 ,, ராம. அழ. கிருஷ்ணப்ப செட்டியார்
56 ,, சு. பழ. ராம. இராமசாமி செட்டியார்
57 ,, லெ. ராம. லெ. லெட்சுமணன் செட்டியார் (மீச்சோ)
58 ,, பெரி. நா. வெ. வெங்கிடாசலம் செட்டியார்
59 ,, அரு. பழ. அரு. பழநியப்ப செட்டியார்
60 ,, சுப. கரு. ராம. சுப்பிரமணியன் செட்டியார்
61 ,, கதி. ராம. வீரப்ப செட்டியார்

62 ,, ராம. சுப்பிரமணியன் செட்டியார்
63 ,, சுப. நாராயணன் செட்டியார்
64 ,, மு. வினைதீர்த்தான் செட்டியார் (சயிலா)
65 ,, வயி. வயி. வயிரவன் செட்டியார்
66 ,, ராம. முத்துக்கருப்பன் செட்டியார்
67 ,, வீர. இராமநாதன் செட்டியார், M. Sc., (கல்கத்தா)
68 ,, பழ. ப. ப. வீர. பழநியப்ப செட்டியார்
69 ,, அரு. வீர. சோம. வீரப்ப செட்டியார்
70 ,, மு. வீர. சிதம்பரம் செட்டியார்
71 ,, பெரி. அரு. வீர. பெரியகருப்பன் செட்டியார்
72 ,, லெ. சிதம்பரம் செட்டியார்
73 ,, சித. சிதம்பரம் செட்டியார்
74 ,, உ. பெரி. உ. உடையப்ப செட்டியார்
75 ,, ப. செ. பழ. வினைதீர்த்தான் செட்டியார்
76 ,, ராம. குமரப்ப செட்டியார்
77 ,, சொ. நாராயணன் செட்டியார்

கோட்டையூர்

78 ,, அழ. இராமசாமி செட்டியார்

காரைக்குடி

79 ,, வீர. பெரியகருப்பன் செட்டியார்

---

## கௌரவ அங்கத்தினர்கள்.

திருவாளர் எ. பெரி. வீர. பெரியணன் செட்டியார்
,, ப. வடு. பெரி. வீர. ராம. வீரப்ப செட்டியார்
,, கு. வீர. பழ. அ. பழநியப்ப செட்டியார்
,, ப. வடு. பெரி. ராம. காசிச் செட்டியார்
,, அ. சு. பழ. வீர. இராமசாமி செட்டியார் (மேந்தான்)
,, SP. வீரப்ப செட்டியார்
,, சு. பி. வீர. பிச்சப்ப செட்டியார்
,, லெ. பெரி. வீர. சோமசுந்தரம் செட்டியார்
,, தி. ராம. சொ. சு. சொக்கலிங்கம் செட்டியார் (கண்டனூர்)

„ பண்டிட் ரெத்தினம் அவர்கள் (கண்டனூர்)
„ வள்ளியம்மை-அண்ணாமலை அவர்கள் (கோட்டையூர்)
„ ஏ. கே. செட்டியார் (சென்னை)
„ ஆ. வி. லெ. அருணாசலம் செட்டியார் (காரைக்குடி)
„ ராய. சொக்கலிங்கம் அவர்கள் „
„ சொ. முருகப்பா அவர்கள், குமரன் ஆசிரியர் „
„ ஏ. எஸ். சர்மா அவர்கள், செட்டிநாடு ஆசிரியர் „

---

## அபிமானிகள்.

திருவாளர் அ. ப. சி. மு. சின்னையா செட்டியார்
„ பெரி. அரு. நாகப்ப செட்டியார் (சயிலா)
„ பழ. சு. பழ. பழனியப்ப செட்டியார்
„ பழ. மு. பழ வீர. முருகப்ப செட்டியார்
„ வீர. குமா. குமரப்ப செட்டியார்
„ அ. ப. சி. வீர. சின்னையா செட்டியார்
„ சி. வீர. சோம. வீரப்ப செட்டியார்
„ சொ. அரு. சு. இராமசாமி செட்டியார்
„ கு. லெ. லெட்சுமணன் செட்டியார் (தோங்குவா)
„ பெரி. அரு. வீரப்ப செட்டியார்
„ ப. மு. நா. முத்துக்கருப்பன் செட்டியார்
„ ப. செ. பழ. சேதுராமன் செட்டியார்
„ அ. மு. வீர. சா. வீரப்ப செட்டியார்
„ ப. செ. பழ. வீரப்ப செட்டியார்

---

## பதினெட்டாவதாண்டுவிழா.

விக்கிரம ஆண்டு சித்திரைத்திங்கள் 28-ம் நாள் (10-5-40) வெள்ளிக்கிழமை காலை, மாலை இருவேளைகளிலும் சங்கத்தின் 18-வது ஆண்டுவிழாவும், ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் 8-வது ஆண்டு விழாவும் திருநெல்வேலி உயர்திருவாளர் கா. சுப்பிரமணிய

பிள்ளை M. A., M. L. அவர்கள் தலைமையில் சென்னை மு. வரத ராஜன் B. O. L. அவர்கள் "நாம்பெற்ற பேறு" என்பதுபற்றியும், புதுவயல் VR. இராமனுதன் M. Sc. அவர்கள் "அணுவின்–அமைப்பு" என்பதுபற்றியும், அண்ணாமலைநகர் அ. சிதம்பரநாதச் செட்டியார் M. A. அவர்கள் "மாநிலைக்கேட்ட மாதவன்" என்பதுபற்றியும், கண்டனூர் ஹம்ஸா சுவாமி அவர்கள் "கல்வி" என்பதுபற்றியும், ஸ்ரீ ச. வி. மாணவ மாணவிகளால் பாட்டு, பேச்சு, நடிப்பு, கும்மி, கோலாட்டம் முதலியவைகளும் நடைபெற்று விழாவும் இனிது நிறைவெய்தியது.

---

## விசேடக் கூட்டம்.

விக்கிரம ஆண்டு சித்திரைத்திங்கள் 29-ம் நாள் (11-5-40) சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L. அவர்கள் தலைமையில் அ. சிதம்பரநாதச் செட்டியார் M. A. அவர்கள் "காரைக்காலம்மையாரும் அவர்தம் கணவனும்" என்பதுபற்றியும், மு. வரதராஜன் B. O. L. அவர்கள் "வழக்குரைத்த கண்ணகி" என்பதுபற்றியும், ச. வி. மாணவ மாணவிகளால் பாட்டுக்களும் நடைபெற்று கூட்டம் இனிது நிறைவெய்தியது.

---

## மாதக் கூட்டங்கள்.

விக்கிரம ஆண்டு வைகாசித் திங்கள் முதல் பங்குனித்திங்கள்வரை பல அறிஞர்கள் தலைமையில் அன்பர்கள் பலரின் சொற்பொழிவுகளுடனும், ச. வி. மாணவ மாணவிகளின் பாட்டு, பேச்சு நடிப்புகளுடனும் மாதக்கூட்டங்கள் 11 நடைபெற்றன.

---

## சங்கீதக் கச்சேரி.

காசி இந்து சர்வகலாசாலை விஞ்ஞானப் பேராசிரியர் திரு. டாக்டர் B. நாசன்னுச்சாரியர் அவர்கள் இந்நகருக்கு வந்திருந்த சமயம் அவர்களை மகிழ்விப்பான்வேண்டி விக்கிரமஆண்டு வைகாசித்திங்கள் 26-ம் நாள் (8-6-40) சனிக்கிழமை இரவு 9-30 மணிக்கு இந்நகர் தனவைசிய சங்கீத திலகம் உயர்திரு. S P. வீரப்பா அவர்களால் பக்க வாத்தியங்களுடன் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது.

## ஜீவகாருண்ய பிரசாரம்.

சாக்கை ஸ்ரீ உய்யவந்தம்மன் உற்சவத்தில் நடத்தும் பலிப் பொங்கலை நிறுத்தவான்வேண்டி சங்கத்தின் சார்பில் விக்கிரம ஆண்டு வைகாசித்திங்கள் 29-ம் நாள் மாலை 6 மணிக்கு பிள்ளையார் கோவில் ஊரணியின் மேல்கரையில் சங்க அங்கத்தினர்களாலும், வித்தியாசாலை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் பிரசங்கங்கள் நடாத்தப்பெற்று துண்டுப் பிரசுரங்களும் வழங்கப் பெற்றன.

---

## பாராட்டுக் கூட்டம்.

விக்கிரம ஆண்டு ஆடித்திங்கள் 31-ம் நாள் (15-8-40) வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நமது சங்கத்தின் அங்கத்தினர் உயர்திரு. VR. இராமநாதன் அவர்கள் (Benares Hindu University) காசி இந்து சர்வகலாசாலையில் M. Sc. பரீட்சையில் முதன்மையாகத் தேர்ச்சிபெற்றதைக் குறித்து திருச்சி St. Joseph's College Physics Professor உயர்திரு. P.E. சுப்பிரமணிய ஐயர் M. A. அவர்கள் தலைமையில் பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. ஷை விழாவில் திருவாளர்கள், அள. குப. கும. இராமசாமி செட்டியார், ப. வடு. பெரி. வீர. ராம. வீரப்ப செட்டியார், எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார், சுப. நாராயணன் செட்டியார், வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார், சோம. தியாகராஜன் செட்டியார், மெ. சிதம்பரம் செட்டியார், M. S. ஜான்ஸ்டீபன், P. பூதலிங்கம், சோம. நாச்சியப்ப செட்டியார் கண்டனூர், வயி. அரு. சுப்பையா செட்டியார் கோட்டையூர் ஆகியவர்கள் பாராட்டுரைகள் கூறினார்கள். ச. வி. மாணவ மாணவிகளால் பாட்டுக்கள் நடைபெற்றதும் இரவு சிற்றுண்டிவிருந்து அளிக்கப்பெற்றது.

ஷை விருந்திற்கு நன்கொடை உதவியவர்கள்:—எ. பெரி. வீர. வீர. ரூ 10ம், சுப. நா. ரூ 7ம், ப. வடு. பெரி. வீர. ரூ 5ம், பெ. ப. வி. அரு. ராம. ரூ 5ம், பழ. மு. பழ. வீர. முரு. ரூ 5ம், அ. சு. பழ. வீர. ராம. நா. ரூ 5ம். அள. குப. ரூ 5ம், சு. பழ. ராம. ரூ 5ம், சித. ராம. ரூ 3ம், மெ. சித. ரூ 3ம், சே. பழ. ரூ 3ம், வீர. பழ. வி. ரூ 3ம், பெரி. அழ. வீர. அழ. ரூ 3ம், எ. பெரி. வீர. பழ. ரூ 3ம், கதி. ராம. வீர. ரூ 3ம், ராம. வெ. ராம. வெ. ரூ 3ம்,

அ. மு. வீர. கதி. வீர. ரூ 3ம், சா. சித. ரூ 2ம், கு. வீர. பழ. அ. பழ. ரூ 2ம், பெரி. நா. லெ. ரூ 2ம், எ. ராம. வீர. பழ. மூ. ரூ 2ம், கா. குழ. ராம. வீர. ராம. ரூ 2ம், அ. ப. சி. மு. சி. ரூ 2ம், பழ. ப. பு. சித. ரூ 1ம், வீர. ராம. ரூ 1ம், சுப. சித. லெ. ரூ 1ம், அ. அழ. அண. ரூ 1ம், சி. பழ. வீர. லெ. ரூ 1ம், கா. அரு. ரூ 1ம், நன்கொடை உதவியுள்ளார்கள். அவர்களுக்கு எங்களது நன்றி உரியதாகுக.

---

## காந்திஜெயந்தி விழா.

விக்கிரம ஆண்டு புரட்டாசித் திங்கள் 19-ம் நாள் மாலையில் மஹாத்மா காந்தியடிகளின் திருவுருவப்படத்தை வண்டியில் வைத்து அலங்கரித்து சங்கத்திலிருந்து மேளவாத்திய கோஷத்துடனும், ச. வி. மாணவ மாணவிகளின் தேசிய கீதத்துடனும் ஊர்வலம் வந்ததும், அமராவதிபுதூர், சுப்பிரமணியன் செட்டியார் குருகுலத்தின் தலைமை ஆசிரியர் உயர்திரு. S. K. நடராஜன் அவர்கள் தலைமையில் தேவகோட்டை நகரக் காங்கிரஸ் கமிட்டிக்காரியதரிசி திரு. D. R. அருணாசலம் அவர்களும், திரு. M. S. ஜான் ஸ்டீபன் அவர்களும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

ஷை விழா திருவாளர்கள் சா. சிதம்பரம் செட்டியார், பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார், சித. இராமசாமி செட்டியார், சோம. இராமசாமி செட்டியார் ஆகியவர்களின் பொருளுதவியினால் நடைபெற்றது.

---

## கலைமகள் விழா.

விக்கிரம ஆண்டு புரட்டாசித்திங்கள் 24-ம் நாள் வெள்ளியினால் செய்யப்பெற்ற ஸ்ரீசரஸ்வதிதேவியின் விக்கிரகத்தை தேரில் வைத்து அலங்கரித்து மேளவாத்திய கோஷத்துடனும், ச. வி. மாணவ மாணவிகளின் தேசிய கோஷத்துடனும் ஸ்ரீ சரஸ்வதி தேவியின் ரதாரோகணவிழா ஆரம்பமாகி நேரு சதுக்கத்திற்கு வந்ததும், வித்தியாசாலை மாணவ மாணவிகளால் கோலாட்டப், கும்மி முதலியவைகளும், மாணவர்களால் இசைக்கேற்ப தேகப்பயிற்சி

யும் நடைபெற்றதும் பவனிவந்து சங்கத்தில் பூஜை நடாத்தி வந்திருந்தோர் அனைவருக்கும் விநியோகங்கள் வழங்க விழா இனிது நிறைவெய்தியது.

ஷை விழா திருவாளர்கள் வீர பழ. விநைதீர்த்தான் செட்டியார், எ. ராம. வீர. பழ. முத்துவள்ளியப்ப செட்டியார், எ. பெரி. வீர. சோலையப்ப செட்டியார், சித. ராம. குமாரப்ப செட்டியார் ஆகியவர்களின் பொருளுதவியினால் நடைபெற்றது.

---

## வ. உ. சிதம்பரம்பிள்ளை தினம்.

விக்கிரம ஆண்டு கார்த்திகைத்திங்கள் 12-ம் நாள் திருவாளர் வெ. பெரி. வீர. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் தலைமையில் காலஞ்சென்ற தூத்துக்குடி தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் தினம் கொண்டாடப்பெற்றது.

---

## நன்கொடை.

லெ. ராம. மகன் லெட்சுமணனுக்கு நடைபெற்ற காப்புக் கட்டுப் புதுமையில் ரூ 5ம், கு. வீர. பழ. அ. பழ. மகள் தெய்வானைக்கு நடைபெற்ற திருமணத்தில் ரூ 11ம், பெரி. அரு. வீர. மகள் உமையாளுக்கு நடைபெற்ற திருமணத்தில் ரூ 11ம், சி. ராம. சு. ராம. மகன் சுப்பிரமணியனுக்கு நடைபெற்ற திருமணத்தில் ரூ 5ம், அ. மு. வீர. கதி. வீர. மகன் கதிரேசனுக்கு நடைபெற்ற காப்புக்கட்டுப் புதுமையில் ரூ 5ம், செ. மெ. செ. சி. ரூ 5ம், பெ. ப. வி. அரு ராம. மகள் வள்ளியம்மைக்கு நடைபெற்ற திருமணத்தில் ரூ 11ம், சே. பழ. மகள் மீனாட்சிக்கு நடைபெற்ற காப்புக்கட்டுப் புதுமையில் ரூ 5ம், பெ. ப. வி. பழ. மகள் உமையாளுக்கு நடைபெற்ற திருமணத்தில் ரூ 25ம், நன்கொடை உதவியுள்ளார்கள். அவர்களுக்கு எங்களது நன்றி உரியதாகுக.

---

## வாசகசாலை.

இச்சங்கத்தின் சார்பில் வாசகசாலை ஒன்று நடைபெற்று வருகின்றது. அதில் 640 புத்தகங்கள் இருக்கின்றன. தினப் பதிப்பு, வாரப் பதிப்பு, வாரமிருமுறை, மாதப் பதிப்பு ஆகிய பத்திரிகைகள் வரவழைக்கப்பெறுகின்றன. பல அன்பர்கள் வந்து வாசித்துவருகின்றார்கள்.

---

## பத்திரிகைக்கு நன்கொடை உதவியவர்கள்.

| | | |
|---|---|---|
| சுதேசமித்திரன் | (தினப்பதிப்பு) | சங்கம் |
| ஆனந்த விகடன் | (வாரப்பதிப்பு) | ,, |
| குமரன் | ,, | ,, |
| செட்டிநாடு | ,, | ,, |
| தனவணிகன் | ,, | ,, |
| லோகோபகாரி | ,, | மெ. சிதம்பரம் செட்டியார் |
| நவயுவன் | (மாதமிருமுறை) | சே. பழநியப்ப செட்டியார் |
| ஆரம்பக்கல்வி | (மாதப்பதிப்பு) | சங்கம் |
| செந்தமிழ்ச் செல்வி | ,, | எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் |
| சித்தாந்தம் | ,, | ,, |
| நல்வழி | ,, | அ. நாகப்ப செட்டியார் |

## புத்தகங்கள், படங்கள், நன்கொடை உதவியவர்கள்.

| | | |
|---|---|---|
| சா. கைலாசம் | படம் | 2 |
| சா. பழநியப்ப செட்டியார் | புத்தகங்கள் | 5 |
| சா. காசிச் செட்டியார் | ,, | 2 |
| சா. சிதம்பரம் செட்டியார் | ,, | 3 |
| சே. பழநியப்ப செட்டியார் | ,, | 1 |
| எ. பெரி. வீர. பழநியப்ப செட்டியார் | ,, | 2 |
| கோட்டையூர் அள. இராமசாமி செட்டியார் | ,, | 1 |
| காரைக்குடி சா. மெ. சா. அழகப்ப செட்டியார் | ,, | 1 |
| தேவகோட்டை RM. SM. கதிரேசன் செட்டியார் | ,, | 23 |

# புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் வருடாந்திரக் கணக்கு

விக்கிரம-ஞு சித்திரை-மீ முதல் பங்குனி-மீ வரை

| விபரம் | வரவு | | | பற்று | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ | அ | பை | ரூ | அ | பை |
| முன் குறிப்பு இருப்பு ... ... | 5 | 11 | 9 | | | |
| ஸ்ரீ விநாயகர் வரவு ... ... | 0 | 2 | 0 | | | |
| ஸ்ரீ சரஸ்வதி வரவு ... ... | 0 | 2 | 0 | | | |
| ஆதாய வரவு ... ... | 5 | 12 | 0 | | | |
| நன்கொடை வரவு .... ... | 175 | 0 | 0 | | | |
| சந்தாக் கணக்கு வரவு ... ... | 162 | 0 | 0 | | | |
| ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலைவரவு .... | 160 | 0 | 0 | | | |
| புத்தகம் கொள்முதல் பற்று ... | | | | 4 | 11 | 0 |
| மாதக்கூட்டச் செலவு ... ... | | | | 5 | 12 | 3 |
| விசேடக்கூட்டச் செலவு ... ... | | | | 108 | 1 | 6 |
| சில்லரைச் செலவு ... ... | | | | 36 | 0 | 6 |
| ஆண்டுவிழாக் கணக்குப்பற்று ... | | | | 303 | 7 | 9 |
| வாசகசாலைப் பற்று ... ... | | | | 48 | 13 | 3 |
| குறிப்பு இருப்பு .... .... | | | | 1 | 13 | 6 |
| ஆக வரவு பற்று கூடியது | 508 | 11 | 9 | 508 | 11 | 9 |

# ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கியவர்கள்.

1-வது ஆண்டு திரு. A. V. சேஷகிரி சாஸ்திரி அவர்கள்,
கண்டனூர்.

2-வது ,, ,, தெ. அரு. சித. இராமனாதன் செட்டியார் அவர்கள்,
கண்டனூர்.

3-வது ,, ,, சொ. முருகப்பா அவர்கள்,
"குமரன்" ஆசிரியர், காரைக்குடி.

4-வது ,, ,, பிச்சப்பா சுப்பிரமணியம் அவர்கள், காந்திநகர்.

5-வது ,, ,, சா. லெ. செட்டியப்ப செட்டியார் அவர்கள்,
காரைக்குடி.

6-வது ,, ,, T. கோமதிநாயகம்பிள்ளை அவர்கள் B. A., B. L.,
தேவகோட்டை.

7-வது ,, ,, P. V. சங்கரராமேஸ்வர ஐயரவர்கள். B. A.,
புதுக்கோட்டை.

8-வது ,, ,, பொ. திருகூடசுந்தரம் பிள்ளை அவர்கள்,
M. A., B. L., திருநெல்வேலி.

9-வது ,, ,, R. P. சேதுப்பிள்ளை அவர்கள், B. A., B. L.,
திருநெல்வேலி.

10-வது ,, ,, T. M. நாராயணசாமி பிள்ளை அவர்கள்,
M. A., B. L., திருச்சி.

11-வது ,, ,, S. சோமசுந்தர பாரதி அவர்கள்,
M. A., B. L., மதுரை.

12-வது ,, ,, ந. வே. உமாமகேஸ்வரம் பிள்ளை அவர்கள்,
B. A., B. L., தஞ்சை.

13-வது ,, ,, தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்,
தூத்துக்குடி.

14-வது ,, ,, T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள்,
B. A., B. L., திருநெல்வேலி.

15-வது ,, ,, திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்
"நவசக்தி" ஆசிரியர், சென்னை.

16-வது ,, ,, S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், B.A., L.T.,
D. E. O., கூடலூர்.

17-வது ,, ,, கவிராஜபண்டிதர். ஜெகவீர பாண்டியனார்
அவர்கள், தூத்துக்குடி.

18-வது ,, ,, கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், M.A., M.L.,
திருநெல்வேலி.

சிவமயம்.

புதுவயல்

# ஸ்ரீசரஸ்வதிவித்தியாசாலையின்

# ஒன்பதாம் ஆண்டு அறிக்கை.

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் ஸ்ரீசரஸ்வதி சங்கத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகிய கல்வியை வளர்க்கும்பொருட்டு ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை என்ற பெயருடன் ஆங்கிரஸ ஆண்டு தைத்திங்கள் 4-ம் நாள் (16-1-1933) ஆரம்பிக்கப்பெற்று தற்பொழுது ஒன்பது ஆண்டுகள் நிறைவெய்தி பத்தாம் ஆண்டு ஆரம்பமாகின்றது.

## கல்வி முறை.

சிறுவர் சிறுமியர்களுக்கு தமிழ்க்கல்வி, ஆங்கிலம், கணக்கு, சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், சுகாதாரம், அரசாங்கமுறைநூல், இலக்கணம், இலக்கியம், தேவாரம், சித்திரம் ஆகிய பாடங்களும், கைத்தொழில், தேகாப்பியாசம், பாட்டு, பேச்சு, நடிப்பு முதலியவைகளும் சிறுமியர்களுக்கு கும்மி, கோலாட்டமும் பயிற்றுவிக்கப்பெறுகின்றன.

Manager

பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார்.

Correspondent

மெ. சிதம்பரம் செட்டியார்.

(16—7—40 முதல்)

## ஆசிரியர், மாணவர் அரசியலார் நன்கொடை.

| ஆண்டு | ஆசிரியர் | ஆசிரியை | வகுப்புகள் | மாணவர்கள் | மாணவிகள் | அரசியலார் நன்கொடை |
|---|---|---|---|---|---|---|
| முதலாவது | 2 | 1 | 4 | 28 | 34 | |
| இரண்டாவது | 3 | 2 | 4 | 40 | 38 | |
| மூன்றாவது | 5 | 1 | 5 | 40 | 39 | |
| நான்காவது | 6 | 1 | 6 | 59 | 52 | |
| ஐந்தாவது | 6 | 1 | 6 | 70 | 63 | |
| ஆறாவது | 7 | 1 | 6 | 87 | 64 | |
| ஏழாவது | 8 | — | 6 | 92 | 68 | ரூ. 373 |
| எட்டாவது | 9 | — | 6 | 105 | 83 | ரூ. 944 |
| ஒன்பதாவது | 9 | 1 | 7 | 115 | 77 | ரூ. 1158 |

## ஆசிரியர்கள்.

1 M. லெட்சுமிநாராயண ஐயர் அவர்கள், B. A., L. T.
தலைமை ஆசிரியர்

2 M. S. ஜான்ஸ்டீபன் அவர்கள்
3 P. பூதலிங்கம் அவர்கள்
4 K. S. முத்துசாமி ஐயர் அவர்கள்
5 S. கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்கள்
6 R. சுப்பிரமணியம் அவர்கள்
7 K. நாகசுப்பிரமணியம் அவர்கள்
8 S. சீதாலெட்சுமி அம்மாள் அவர்கள், (ஆசிரியை.)
9 S. கிருஷ்ணய்யங்கார் அவர்கள்
10 S. ஸ்ரீ ராமு ஐயங்கார் அவர்கள்

## அரசாங்க அங்கீகாரம்.

இதுவரையில் 5-வது வகுப்பு வரையில் அரசாங்க அங்கீகாரம்பெற்று ஒரு எலிமென்டரி பாடசாலையாக நடத்தப்பெற்றுவந்த நமது வித்தியாசாலையானது ஓர் ஹையர் எலிமெண்டரி பாடசாலையாக அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பெற்று நடைபெற்று வருகிறது.

## புத்தகசாலை.

மாணவர் நூல் நிலயத்தில் கல்வி சம்பந்தமாக 419 புத்தகங்கள் இருக்கின்றன.

---

## உபகரணங்கள்.

மாணவ மாணவிகளின் பயிற்சிக்குறிய நாணயங்கள், பொருட்பாடப் படங்கள், தேசப்படங்கள், குளோப் (Globe) தையல் மிஷின் முதலியனவும் இன்னும் பல உபகரணங்களும் ஆர்மோனியமும் இருக்கின்றன.

---

## புக்ஸ்டால்.

மாணவ மாணவிகளுக்கு வேண்டிய பாடப்புத்தகங்கள், ஸ்டேஷனரிச் சாமான்கள் முதலியன வித்தியாசாலையின் சார்பில் விற்பனை செய்யப்பெறுகின்றன.

---

## விழாக்கள்.

வருடப்பிறப்புவிழா, திருவள்ளுவர் விழா, விநாயகர் சதுர்த்திவிழா, பாரதி விழா, காந்திஜெயந்தி விழா, கலைமகள் விழா, கிலிக்கி எடுப்பு விழா, விஜயதசமி விழா, தைப்பொங்கல் விழா ஆகிய விழாக்கள் கொண்டாடப்பெறுகின்றன.

குறிப்பு:— விநாயகர் சதுர்த்தி விழா:- திருவாளர்கள், அ. இராமசாமி செட்டியார், லெ. இராமநாதன் செட்டியார், மெ. சிதம்பரம் செட்டியார், மெ. நடேசன் செட்டியார். கிலிக்கி எடுப்பு விழா:- திருவாளர் வீர. பழநியப்பசெட்டியார். விஜயதசமி விழா:- திருவாளர்கள் சே. பழநியப்ப செட்டியார், கா. அருணாசலம் செட்டியார், அ. மு. வீர. கதி. வீரப்ப செட்டியார் ஆகியவர்களின் பொருளுதவிகளினால் நடைபெற்றன.

---

## திருமறைப்பணி.

விக்கிரம ஆண்டு ஆனித்திங்கள் 6-ம் நாள் மாலை சாக்கை ஸ்ரீ வீரசேகர உமையாம்பிகைக்கு நடைபெற்ற உற்சவத்தின் ஐந்தாவது நாள் தபசுக்காக்ஷி சமயம் வித்தியசாலை மாணவர்களால் இன்னிசைக் கருவிகளுடன் தேவாரம் பாடப்பெற்றது.

## பரீட்சை.

இவ்வாண்டில் 14—4—41 முதல் 19—4—41 வரை வருடப்பரீட்சை நடைபெற்றது.

---

## புத்தகங்கள் நன்கொடை உதவியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| மதுரை | E. M. கோபாலகிருஷ்ண கோன் | புத்தகங்கள் | 12 |
| திருச்சி | T. G. கோபால் பிள்ளை | ,, | 7 |
| பசுமலை | S. N. ரத்னம் அண் கோ | ,, | 5 |
| சென்னை | B. G. பால் அண் கோ | ,, | 5 |
| திருநெல்வேலி | S. R. சுப்பிரமணிய பிள்ளை | ,, | 5 |
| கும்பகோணம் | C. V. K. பப்ளிஷிங் ஹவுஸ் | ,, | 3 |

---

## மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள்.

வித்தியாசாலையின் எட்டாவதாண்டு விழாவில் மாணவ மாணவிகளுக்கு வகுப்புத்தேர்ச்சிப் பரிசுகள், நீண்டநாள் வந்தவர்களுக்குப் பரிசுகள், சுத்தமாக வந்ததற்குப் பரிசுகள், பெண்களுக்குக் கைத்தொழில் பரிசுகள், பொதுப்பரிசு ஆகியவைகள் திருவாளர் எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் அவர்களின் பொருளுதவியால் கொடுக்கப்பெற்றன.

# ஒன்பதாவதாண்டுவிழாவில் பரிசு பெறுபவர்கள்

## வகுப்புத்தேர்ச்சிப் பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 6-வது Senior வகுப்பு | முதற்பரிசு | வ. நாராயணன் |
| ,, | 2-வது பரிசு | திரு. கிருஷ்ணன் |
| 6-வது வகுப்பு | முதற்பரிசு | பெரி. சிவனடியான் |
| ,, | 2-வது பரிசு | S. ராமனுதன் |
| 5-வது வகுப்பு | முதற்பரிசு | அழ. சேவுகஞ்செட்டி |
| ,, | 2-வது பரிசு | ஸ்ரீ. ரெங்கசாமி |
| 4-வது வகுப்பு | முதற்பரிசு | ராம. சீதாலக்ஷிமி |
| ,, | 2-வது பரிசு | S. சுந்தரம் |
| 3-வது வகுப்பு | முதற்பரிசு | சொ. அழகப்பன் |
| ,, | 2-வது பரிசு | பழ. சிவகாமி |
| 2-வது வகுப்பு | முதற்பரிசு | ஸ்ரீ. ராமசாமி |
| ,, | 2-வது பரிசு | க. சுப்பையா |
| 1-வது வகுப்பு | முதற்பரிசு | த. பாலுச்சாமி |
| ,, | 2-வது பரிசு | ச. முத்தையா |
| | | ஸ்ரீ. ஸ்ரீரெங்கம் |

உ

சிவமயம்

# புதுவயல்
# ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை
# நிர்வாகக் கமிட்டி
# அறிக்கை.

---

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின்சார்பில் ஆரம்பிக்கப்பெற்று நடைபெற்றுவரும் இவ் வித்தியாசாலையை நிர்வகித்துவரவும், இதை சிறந்த முறையில் ஒரு உயர்தரப் பாடசாலையாக (High School) நடாத்த வேண்டுமென்ற நோக்கத்துடனும் நாளது பிரமாதி ஆண்டு சித்திரைத் திங்கள் 20ம் நாள் (3—4—1939) இக்கமிட்டி ஆரம்பிக்கப் பெற்று அதன் முன்னேற்றத்திற்காக உழைத்துவருகிறது:

தலைவர் திருவாளர் பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார்

காரியதரிசி ,, பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார் (Manager)

உப-காரியதரிசி ,, மெ. சிதம்பரம் செட்டியார் (Correspondent)

---

## அங்கத்தினர்கள்.

திருவாளர் எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார்
,, அ. ப. சி. வீர. சின்னையா செட்டியார்
,, SP. வீரப்ப செட்டியார்
,, பழ. மு. பழ. வீர. முருகப்ப செட்டியார்
,, வீர. பழ. விஸ்வநாதன் செட்டியார்
,, ப. வடு. வ். கா. வீரப்ப செட்டியார்
,, சித. இராமசாமி செட்டியார் (சிரம்பான்)
,, ராம. வெ. ராம. வெங்கிடாசலம் செட்டியார்

---

## போஷகர்கள்.

| | | |
|---|---|---|
| திருவாளர் | பெ. ப. வி. அரு. வெள்ளச்சி ஆச்சி | ரூ 466 |
| ,, | பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார் | ரூ 240 |
| ,, | பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார் | ரூ 240 |
| ,, | எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் | ரூ 200 |
| ,, | எ. அ. ப. வீர. பழநியப்ப செட்டியார் | ரூ 60 |
| ,, | வீர. சோலையப்ப செட்டியார் | ரூ 25 |
| ,, | ப. வடு. வி. நா. வீரப்ப செட்டியார் | ரூ 25 |
| ,, | ராம. வெ. ராம. வெங்கிடாசலம் செட்டியார் | ரூ 25 |
| ,, | ராம. அழ. கிருஷ்ணப்ப செட்டியார் | ரூ 25 |
| ,, | வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார் | ரூ 25 |
| ,, | மெ. சிதம்பரம் செட்டியார் | ரூ 25 |

ஆகியவர்கள் விக்கிரம ஆண்டில் நன்கொடை உதவியுள்ளார்கள் அவர்களுக்கு எங்களது நன்றி உரியதாகுக.

---

## நன்கொடை.

வெ. சி. பழ. நாகம்மை ஆச்சி ரூ 5 நன்கொடை உதவியுள்ளார்கள். அவர்களுக்கு எங்களது நன்றி உரியதாகுக.

---

## செட்டிநாடு ராஜா அவர்களின் பொற்பதக்கப் பரிசு

பிரமாதி ஆண்டில் 4, 5, 6வது வகுப்புகளில் தமிழ்க் கணக்கில் முதன்மையாகத் தேர்ச்சிபெற்ற 4வது வகுப்பு தனவணிக மாணவன் கா. முத்துப்பட்டணம் அள. சேவுகஞ்செட்டிக்கு நாளது விக்கிரமஆண்டு சித்திரைத்திங்கள் 28-ம் நாள் (10-5-1940) திருநெல்வேலி உயர்திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் செட்டிநாடு ராஜா அவர்களின் பொற்பதக்கப்பரிசு கொடுக்கப்பெற்றது.

## புதுவயல், ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின்

| விபரம் | | | |
|---|---|---|---|
| முன் குறிப்பு இருப்பு | .... | .... | .... |
| ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலைக் கமிட்டி வரவு | | .... | .... |
| ஆசிரியலார் நன்கொடை வரவு | .... | .... | .... |
| பெற்றோர்கள் நன்கொடை வரவு | .... | .... | .... |
| கைத்தொழில் சாமான் கொள்முதல் பற்று | | .... | .... |
| பெற்றோர்கள் சங்க சிலவு | .... | .... | .... |
| புருஸிடென்டு பண்டு சிலவு | .... | .... | .... |
| சம்பளச் சிலவு .... | .... | .... | ... |
| தபால் சிலவு .... | .... | .... | .... |
| ஸ்டேஷனரி சிலவு .... | .... | .... | .... |
| சிலவு .... | .... | .... | .... |
| குறிப்பு இருப்பு .... | .... | .... | .... |

ஆக வரவு பற்று கூடியது

பிரமாதி விக்கிரம ஆண்டு கணக்குகள்

| வரவு | | | பற்று | | | வரவு | | | பற்று | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ரூ | அ | பை | ரூ | அ | பை | ரூ | அ | பை | ரூ | அ | பை |
| | | | | | | 25 | 7 | 0 | | | |
| 500 | 0 | 0 | | | | 1125 | 0 | 0 | | | |
| 1317 | 0 | 0 | | | | 1158 | 0 | 0 | | | |
| 405 | 0 | 0 | | | | 249 | 0 | 0 | | | |
| | | | 3 | 3 | 3 | | | | 4 | 10 | 6 |
| | | | 21 | 9 | 6 | | | | 1 | 2 | 0 |
| | | | 8 | 0 | 0 | | | | | | |
| | | | 1980 | 3 | 3 | | | | 2482 | 1 | 9 |
| | | | 8 | 9 | 9 | | | | 6 | 9 | 0 |
| | | | 54 | 8 | 0 | | | | 16 | 11 | 3 |
| | | | 120 | 7 | 3 | | | | 43 | 9 | 3 |
| | | | 25 | 7 | 0 | | | | 2 | 11 | 3 |
| 2222 | 0 | 0 | 2222 | 0 | 0 | 2557 | 7 | 0 | 2557 | 7 | 0 |

## ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலைக் கமிட்டியின்

| விபரம் | | | |
|---|---|---|---|
| முன் குறிப்பு இருப்பு .... | .... | .... | .... |
| ஸ்ரீ விநாயகர்வரவு .... | .... | .... | .... |
| ஸ்ரீ சரஸ்வதி வரவு .... | .... | .... | .... |
| ஆதாய வரவு .... | .... | .... | .... |
| நன்கொடை வரவு .... | .... | .... | .... |
| ச. வி. நாடகக்கழகத்தார் வரவு | .... | .... | .... |
| செட்டிநாடு ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரவர்களின் பரிசுநிதி வரவு | | | |
| சாமான் கொள்முதல் பற்று | .... | .... | .... |
| வித்தியாசாலைக் கட்டிடப்பற்று | .... | .... | .... |
| பெரி. வீர. ராம. பற்று | .... | .... | .... |
| பெரியகோட்டை கரு. செல்லத்தேவன் அம்பலம் பற்று | | | .... |
| புக்ஸ்டால் பற்று .... | .... | .... | .... |
| ஸ்ரீ சரஸ்வதி சங்கம் பற்று | .... | .... | .... |
| புதுவயல் தபாலாபீஸ் சேவிங்ஸ் கணக்கு பற்று | | .... | .... |
| காரைக்குடி இந்தியன் பாங்க் சேவிங்ஸ் கணக்கு பற்று | | | .... |
| கைமாத்து பற்று .... | .... | .... | .... |
| ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை பற்று | .... | .... | .... |
| சிலவு கணக்கு பற்று .... | .... | ... | .... |
| தோட்ட வரவு ... | .... | ... | ... |
| ஷேர் கொள்முதல் பற்று | .... | .... | .... |
| குறிப்பு இருப்பு .... | .... | .... | .... |
| ஆக வரவு பற்று கூடியது | | | |

## பிரமாதி விக்கிரம ஆண்டு கணக்குகள்

| வரவு | | | பற்று | | | வரவு | | | பற்று | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ரூ | அ | பை | ரூ | அ | பை | ரூ | அ | பை | ரூ | அ | பை |
| | | | | | | 77 | 12 | 0 | | | |
| 3 | 12 | 0 | | | | 1 | 10 | 0 | | | |
| 1 | 0 | 0 | | | | 0 | 2 | 0 | | | |
| 623 | 1 | 0 | | | | 160 | 14 | 2 | | | |
| 26568 | 1 | 10 | | | | 1361 | 0 | 0 | | | |
| 893 | 13 | 3 | | | | | | | | | |
| 518 | 7 | 9 | | | | | | | | | |
| | | | 1232 | 1 | 1 | | | | 62 | 2 | 0 |
| | | | 24180 | 12 | 0 | | | | | | |
| | | | 255 | 0 | 0 | | | | | | |
| | | | 15 | 0 | 0 | | | | | | |
| | | | 55 | 0 | 0 | 30 | 0 | 0 | | | |
| | | | 100 | 0 | 0 | | | | 160 | 0 | 0 |
| | | | 1088 | 11 | 0 | 361 | 1 | 0 | | | |
| | | | 518 | 7 | 9 | 495 | 12 | 1 | | | |
| | | | 16 | 0 | 0 | | | | | | |
| | | | 760 | 0 | 0 | | | | 925 | 0 | 0 |
| | | | 369 | 8 | 0 | | | | 248 | 8 | 9 |
| | | | | | | 7 | 13 | 0 | | | |
| | | | | | | | | | 487 | 4 | 0 |
| | | | 77 | 12 | 0 | | | | 613 | 1 | 6 |
| 28608 | 3 | 10 | 28608 | 3 | 10 | 2496 | 0 | 3 | 2496 | 0 | 3 |

# அபிப்பிராயம் தந்தவர்கள்.

கலைமகள் பெயர்தாங்கி நடைபெறும் இக் கல்விக்கழகத்தினைக்கண்டு மாணவர் ஆடல்பாடல்களை அறிந்து இன்புறும்பேறு பெற்றேன். இவ்வூர்ச் செல்வர் கல்வியை எத்துணைவிழுமியதொரு செல்வமாகப்போற்றி வருகின்றனர் என்பதை உணர்ந்து உவகை கொண்டேன். தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத முயற்சியாகிய இத்துறையில் ஈடுபட்டுப் பணிசெய்யும் சங்கத்தினர் நீடுவாழ இறைவன் அருளுமாறு வேண்டுகின்றேன்.

(ஒப்பம்) மு. வரதராஜன் B. O. L.
தமிழ் ஆசிரியர்,
11—5—40. பச்சையப்பன் காலேஜ், சென்னை.

---

இக் கலைமகள் சங்கத்தின் இவ்வாண்டு நிறைவுவிழாவில் தலைமைதாங்கும் பேறுபெற்றமை எனக்கு மிகுந்த மகிழ்ச்சிதந்தது. கல்வித்தெய்வம், பெண்ணுருவிருத்தற்குத்தக்கபடி இச்சங்கம் கல்லூரி மாணவிகள் இயல், இசை, நாடகம் என்னுமுத்தமிழ் நயங் கனிந்த ஆடல் பாடல்களை இனிது நுகர்ந்தேன். கண்ணன் பாடல்கள் மிகுதியாய்க் காணப்படுதல்போல கூத்தப்பெருமான், முருகன் முதலியோர் சார்பான பாடல்களும் பயிற்றப்படுதல் நலம். இங்ஙனம், மாணவர், மாணவிகளுக்கு நல்ல முத்தமிழ்ப்பயிற்சி எய்தும்படி உழைப்பெடுத்த திருவாளர் SP. வீரப்பாவின் திறம் மிகவும் பாராட்டத்தக்கது. இக்கல்லூரி மாணவர்கள் எல்லாவகைக் கலைப்பயன்களும் பெற்று நல்வாழ்க்கையெய்துமாறும், இக்கல்லூரியும், சங்கமும் நீடூழி தழைத்தோங்குமாறும் இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

(ஒப்பம்) கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L.
அட்வோகேட்,
11—5—40. தாகூர்சட்ட ஆசிரியர். (1920)

புதுவயல் சரஸ்வதிவித்தியாசாலை நல்லமுறையிலே அமைக்கப்பட்டு நடந்துவருகிறது. அழகான கட்டிடம் மிக்க பொருட்செலவிற் கட்டப்பட்டு மாணவ மாணவிகளுக்கும் பயன்கொடுத்து நின்று வருகிறது. இவ்வித்தியாசாலையில் ஜாதிபேதமின்றி மக்களெல்லாம் கல்வியயிற்றப்படுதல் போற்றுதற்குரித்து. பாடங்களும் இசைப்பாடல்களும் நடிப்பும் கற்பிக்கப்பட்டுவருகின்றன. எல்லா மாணவரும் ஊக்கத்தோடு படித்துவருதலைக்கண்டு மகிழ்ந்தேன். இதனை நிறுவிய பெரியாரும், அவருக்குத் துணையாக நின்றுதவி வரும் பிறரும் நீடூழிவாழ்ந்து இன்னம் இன்னம் தமிழிற்கும் சைவத்திற்கும் தொண்டியற்றிப் பேறுகளெல்லாம் பெறுவாராக என்று இறைவன்றுணைகொண்டு வாழ்த்துகின்றேன்.

(ஒப்பம்) அ. சிதம்பரநாதச் செட்டியார், M.A.,
தமிழ் விரிவுரையாளர்,
11—5—40 அண்ணாமலைநகர்.

---

## மொழிபெயர்ப்பு.

இன்று சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெற்ற பெற்றோர்கள் சங்க மாதக்கூட்டத்திற்குத் தலைமைவகிக்கும்படியான தனிப்பெரும் பாக்கியம்பெற்றேன். பள்ளிக்கூடத்திற்கும் பெற்றோர்களுக்குமுள்ள நெருங்கிய சம்பந்தத்தை இங்கு காண்பது போல் வேறு எங்கும் பார்ப்பது அரிது. பள்ளிக்கூடம் ஒரு அழகிய விசாலமான கட்டிடத்தில் அமைந்திருப்பதுடன் கூட்டங்கள், கடவுள் வணக்கம் முதலியன நடத்த ஒரு பெரிய தனி இடம் இருக்கிறது. கல்வி அதிகாரிகளின் தயைவாய்ந்த பராமரிப்பும் பொதுஜன ஆதரவும் இவ்வித்தியாசாலை பெறுதல் தகும் என்பது நிச்சயம். இக்கல்வி ஸ்தாபனம் தற்காலிகமாக வெகுவிரைவில் எட்டாவது வகுப்புவரை அங்கிகரிக்கப்படவேண்டியது அவசியமென நான் நினைக்கிறேன். அவ்விதம் அங்கிகரிக்கப்படவில்லையேல் வித்தியாசாலைக்குப் படிக்கவரும் மாணவ மாணவிகள் ஒன்று அல்லது இரண்டு வருஷங்கள் உயர்படிப்பை இழக்க நேரிடுவதுடன் வருங்காலத்தில் திறமைபெற்ற கல்விமான்களாக

வரக்கூடிய மாணவர்களின் மனம் இவ்வித்தியாசாலையின்பால் செல்லாது.

ஒரு சமூகத்தால் கொடுக்கப்பெறும் காணிக்கைகளில் பெரிது கல்வியே. அது மாத்திரமின்றி ஒரு சமூகம் திருப்திகாமாய் வேலை செய்வதற்குச் சான்று கல்வியைப் பரப்புவதேயாம். ஆசிரியர்கள் மாணவ மாணவிகளிடத்தில் மிகுந்த சிரத்தை எடுத்து வருவதுமன்றி அவர்கள் வேலையில் அன்பும் ஆர்வமும்காட்டி வருகின்றனரென நான் கண்டறிந்தேன். அவர்கள் தங்கள் வேலையில் பெற்றோரிடமிருந்தும் மற்றோரிடமிருந்தும் எல்லா வகையிலும் ஊக்கம் பெறுவாராக.

(ஒப்பம்) B. தாசன்ணுச்சார்யா,
M. A. (Madras) Doctor of Physics, (Munich)
Head, Department of Physics, (London)
7—6—40 Benares Hindu University.

---

சரஸ்வதி வித்தியாசாலை, சரஸ்வதி சங்கம், சரஸ்வதி வாசகசாலை இம்மூன்றையும் நண்பர்களோடு பார்த்துப் பயன்படுத்திக்கொண்டோம். வித்தியாசாலையில் மாணவ மாணுக்கியர் 180 பேர் பயில்கின்றனறென்றும் ஏழாவது வகுப்புவரை யிருக்கின்றது என்றும் அறிந்தோம். குழந்தைகள் பிரசங்கமும், பாட்டும் மனதைக் கவர்கின்றன. சங்கத்தின் வாசகசாலையில் பல பத்திரிகைகள் வருகின்றன. வாசகசாலையை எந்நேரமும் திறந்துவைத்தால் பல அன்பர்கள் வந்து பயன்பெற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கின்றோம். வித்தியாசாலையும், சங்கமும், வாசகசாலையும் என்றும் நிலவித் தொண்டாற்றப் பரம்பொருளை இறைஞ்சுகின்றோம்.

(ஒப்பம்) ஆ. டழ. சோக்கலிங்கன்,
13—7—40 பேலைச்சிவபுரி.

## மொழிபெயர்ப்பு.

இக்கல்வி ஸ்தாபனத்தைப் பார்க்க நேர்ந்ததற்கு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். கட்டிடத்தோற்றமும் காற்றோட்ட மிருந்த விசாலமான வகுப்பு அறைகளும் பார்ப்பவர் மனதைப் பரவசப்படுத்தும். இச் செட்டிமார்நாட்டில் கூட்டுக்கல்வியை பெரிதும் ஆதரிக்கக்கூடிய சில கல்வி நிலையங்களில் இதுவும் ஒன்று.

(ஒப்பம்) திருப்பதி செட்டியார் என்ற
VR. M. VR. ராமசாமி செட்டியார், B. A.
16—7—40 முத்துப்பட்டணம் காரைக்குடி.

---

## மொழிபெயர்ப்பு.

இவ்வித்தியாசாலைக்கு விஜயஞ் செய்ததைக்குறித்து சந்தோஷமடைகிறேன். மாணவ மாணவிகள் அதிக உற்சாகத்துடன் கல்வி பயில்கின்றனர். மேலும் இவ்வூரிலுள்ள பெரியோர்கள் வித்தியாசாலை வளர்ந்து நன்கு நடைபெற சிரத்தைகாட்டி வருகின்றனர். நான் ஒரு பெருந்தன்மையான இடத்திற்குக் கொண்டு வந்ததாகவே உணர்ந்தேன். ஆசிரியர்களின் கைங்கரியத்தில் பொதுஜன ஒத்துழைப்பும் இங்கு அமைந்திருக்கிறது. இக் கல்விக் கழகம் வெகு நேர்த்தியானதே.

குசையப்பன் கல்லூரி, திருச்சி. 15—8—40. (ஒப்பம்) P. E. சுப்பிரமணியன்,
பௌதிகசாஸ்திர நிபுணர்.

---

## மொழிபெயர்ப்பு.

இந்த வித்தியாசாலை நேர்முறையில் நடைபெற்றுவருவதைப்பார்க்க நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். வித்தியாசாலை நிர்வாகஸ்தர்களில் ஒருவருடன் இதன் அபிவிருத்தி சம்பந்தமாய் விஷயாலோசனை செய்தேன். ஆதித்திராவிடப் பையன்கள் இருவரே இங்கு பயிற்சிபெற்று வருகின்றனரென்பது பரிதாபகாமானது. வித்தியாசாலையின் சார்பில் ஆதித்திராவிடப் பிள்ளைகளுக்குப்

பகற் சாப்பாடு இலவசமாய் அளிக்கப்படுமானல் ஒரு பெரும் பகுதியினர் வித்தியாசாலையில் சேர்ந்து கல்வியின் பயனைப் பெறுவாரென நான் நிச்சயமாய் அறிகிறேன். இப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு காய்கறித் தோட்டம் தேவை. சில சாட்டினங்களும் சுழன்று கொண்டிருந்தால் பள்ளிக்கூடத்தின் வனப்பு அதிகரிக்கும். தொழிற் கல்வி, விவசாயக் கல்வி இவற்றில் ஆர்வங்கொண்ட நிர்வாகஸ்தர்களும் தலைமை ஆசிரியரும் வித்தியாசாலை செவ்வனே நடைபெற ஊக்கங்காட்டி வருகின்றனரென்பது பாராட்டத் தக்கதேயாம்.

(ஒப்பம்) S. கணபதி,

கோவாபரேடிவ் சொஸைட்டி இன்ஸ்பெக்டர் (லீவில்)

19—8—40. மதுரை.

---

21-8-40 இன்று இப் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டேன். மிகவும் நல்லமுறையில் நடத்தப்பெற்று வருகிறது. இதை ஒரு மத்தியதரப் பள்ளிக்கூடமாக்க வேண்டுமென்பது தலைமையாசிரியரின் விருப்பம். போதனமுறைக்குவேண்டிய உபகரணங்கள் சில இருந்தால் நன்மையாக இருக்கும். போதுமான ஆசிரியர்களும் இடவசதியுமிருக்கிறது. இந்த திருப்பத்தூர் ரேஞ்சில் இதை ஒரு மத்தியதரப் பள்ளிக்கூடமாக்க வேண்டியது மிகவும் அவசியம்.

(ஒப்பம்) PL M முத்தையா செட்டியார்,

மானேஜர் அன் கரஸ்பாண்டெண்ட்

M. H. E. ஸ்கூல், கல்லுப்பட்டி.

---

## மொழிபெயர்ப்பு.

7—10—40 நான் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலைக்கு நவராத்திரி தினங்கள் ஒன்றில் விஜயஞ்செய்ய நேர்ந்ததைக்குறித்து உண்மையான ஆனந்தமடைந்தேன். பள்ளிக்கூடத்தின் சுத்தமும் சுகாதார அமைப்பும் என் மனதைக் கவர்ச்சிசெய்தது. ஆசிரியர்கள் உற்சாகத்துடன் வேலைசெய்து வருகின்றனரென்றும் பொதுஜனங்களும் பெற்றோர்களும் ஒத்துழைக்கின்றனரென்றும் கூறப்

போதியசான்று இருக்கிறது. மாணவ மாணவிகள் வித்தியாசாலையிடத்தும் ஆசிரியர்கள் பேரிலும் பிரியங்கொண்டிருக்கிறார்களென்று அவர்களுடைய பிரகாசமிருந்த முகமலர்ச்சி எடுத்துக் காட்டுகின்றது. வருடங்கள் செல்லச்செல்ல வித்தியாசாலையும் வளர்ந்துகொண்டே வரவேண்டுமென்பதாக நான் பிரார்த்திக்கின்றேன்.

(ஒப்பம்) V. குருசாமி சாஸ்திரி
தலைமை ஆசிரியர்,
ஸ்ரீ சிவஸ்வாமி அய்யர் ஹைஸ்கூல்,
திருக்காட்டுப்பள்ளி.

---

நிகழும் விக்ரமயாண்டு புரட்டாசித்திங்கள் 24-ம் நாள் (9—10—40) கலைமகள் திருநாளன்று இப் பள்ளியைக்காணும் பேறுபெற்றேன். தமிழ்நாட்டில் ஆரம்பக்கல்விக்கெனப் பெருமுயற்சியால் அமைந்த கழகங்கள் சிலவற்றுள் இது பல்லாற்றானும் முன்னணியில் விளங்குகின்றது என்பது எனது துணிபு.

இறைவனது அருளும், பொதுமக்களது கூட்டுறவும் பொருந்தி விரைவில் இக்கழகம் உயர்நிலையடைய பிரார்த்திக்கின்றேன்.

(ஒப்பம்) திரு. ஐயன்பெருமாள் கோனார்,
தமிழாசிரியன்,
அர்ச் சூசையப்பன் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

---

## மொழிபெயர்ப்பு.

இத் தேசியப் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட எங்களுக்கு சந்தர்ப்பம் அளித்த காரியதரிசிக்கு வந்தனம் செலுத்துகின்றோம். நேர்முறையில் நடத்தப்படும் தேசியக் கல்வியின்மூலமே தேசம் தனது லக்ஷியத்தைப்பெறுமென நாங்கள் நம்புகின்றோம். குணம் அமைவதற்கு மதம், பக்திமார்க்கம் இவை சம்மந்தமான ஒரு கட்டாயப்பாடம் வைக்கவேண்டியது அவசியம். இம்மாதிரி பள்ளிக்கூடத்தில் குடிசைத்தொழிலும் கற்பிக்கவேண்டியது இன்றியமையாததே. தேகசுகாதார சம்பந்தமான கட்டாயப்பாடம் ஒன்றும் இளைஞர்களுக்கு மிகவும் தேவை. சூரிய நமஸ்காரம், யோகாசனங்கள்போன்ற பல சரீரப் பயிற்சிகள் சுகாதாரக் கல்வியில் புகுத்தப்படல் வேண்டும்.

ஓம் தத்ஸத்,

(ஒப்பம்) அ. குமாரசாமி செட்டி,
சென்னை.

25—12—40

## வேண்டுகோள்.

அறிவு அனைவர்க்கும் பொது. ஆயினும் அதை மக்கள் உணரச்செய்யும் வழியை செயலில் காட்ட அழைப்பது எளிதன்று. இன்று மேனாட்டிற் கல்விப்பஞ்சம் இல்லாது மக்கள் அறிவுச்செல்வம் பெற்றதற்குக் காரணங்கள் பல உண்டு. ஆயினும் அந்நாட்டு மக்கள் கல்வி கற்பதில் பரம்பரையாக தளராத ஊக்கத்துடன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றார்கள். நம்நாடோ பஞ்சப்பிணியும், அறியாத்தன்மையும் மலிந்து, எந்நாட்டு மக்களின் கல்விப் பெருக்கிற்கும் முன்னிற்க முடியாது புறமுதுகு காட்டுகின்றது. செல்வத்துள் கல்விச்செல்வமே கருந்தனம். பொருட் செல்வம் நிலையற்றது. பாமர மக்களின் அறிவுக் கண்ணைத் திறந்தாலன்றி நவயுகத்திற் புகுதல் எளிதன்று. தேசப் பற்றில் ஊறிய கவி பாரதியார் நெஞ்சு குமுற, தன் நாட்டின் வீழ்ச்சியை எண்ணி மனம் புண்ணாகி, வீதிகள்தோறும் பள்ளித்தலம் அமைக்க வேண்டுமென்ற கட்டளையை மிகுந்த சக்தியோடு எழுப்பி இருக்கின்றார், ஏன்! முற்காலத்தில் உன்னத நிலையிலிருந்த இந்நாட்டின் பெருமையை மானஸீகமாக உணர்ந்த மூதறிவாளர் இதயம் ஏன் கொந்தளித்துக் கொதிக்காதிருக்கும்? பிற்கால சந்ததியின் முற்போக்கை கருத்தில்கொண்டு நாம் என்ன செய்ய வேண்டும்? பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைகின்ற கல்விச் செல்வத்தை வானளாவும் உன்னத நிலைக்குக் கொண்டுவர வேண்டாமா? நம்நாடு அறிவுச்சுடர் பரப்ப ஆசைகொள்ள வேண்டாமா? எழுத்தறிவற்ற இந்திய மக்கள் ஈண்டில்லை என்று நிரூபிக்க வேண்டாமா? ஆம். வேண்டும் வேண்டும், இன்றே விழித்தெழுவோம், நன்றே கடமை யுணர்ந்து அறிவுத்தொண்டாற்றுவோம் என்று முழங்குங்கள்.

இன்று நம்நாடு வேண்டும் தேவைகள் பலவற்றுள் முதன்மையாய் நிற்கும் கல்வித்தொண்டில் நமது வித்தியாசாலை சிறுகச் சிறுகப் பெருகி அரிய தொண்டுசெய்து வந்திருக்கின்றது. அன்பிதய நோக்கு, ஆர்வம், உழைப்பு இவை ஒன்று திரண்டு உருவாகியதுதான் நமது ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையிற் காணும் முற்போக்குச் சக்திகள் என்றால் ஒருக்காலும் மிகையாகாது. ஒரு சில மாணவ மாணவிகள் கொண்டு ஆரம்பிக்கப்பெற்ற இவ்வித்தியா

சாலை இன்று நிலையான மாளிகையில் திகழ்ந்து அரசாங்க அங்கீகாரம்பெற்று, நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் கொண்ட உன்னதக் கலாசாலையாக விளங்குவது அன்பர்களின் ஆர்வத்தையே குறிக்கின்றது. உண்மைத்தொண்டு செய்யும் அகத்தூய்மையுள்ள அன்பர்களின் திருப்பணியை எண்ணுந்தோறும் அன்புசுரக்காத இதயம் இராதென்று துணிந்து கூறலாம். முன்னேற்றத்திலேயே கருத்தூன்றி காரியம் செய்யும் அன்பர்கள் வித்தியாசாலைக்கு தங்கள் குழந்தைகளை கல்விப்பயிற்சிக்கு அனுப்பி சில நாளில் நிறைவுகூடல் ஆக்குதற்கு ஊக்கம் தந்து உதவ வேண்டுகின்றோம். தரும சிந்தனையுடைய அன்பர்கள் பொருளுதவி, ஆர்வம், தொண்டு, ஆதரவு இவற்றால் நமது சங்கத்தையும், வித்தியாசாலையையும் வளர்ச்சி அடையச் செய்யுமாறு வேட்டுக்கொள்ளுகிறோம்.

---

## நன்றியறிவித்தல்.

நமது சங்கமும் வித்தியாசாலையும் வளர்ந்தோங்கிவர வேண்டுமென்ற பேரவாவினால் தங்களுடைய வேலைகளை எல்லாம் பொருட்படுத்தாது ஊக்கம்கொண்டு உழைத்துவரும் அங்கத்தினர்களுக்கும், அபிமானிகளுக்கும், பெரியோர்களுக்கும், விழாக்களில் பொருளுதவி செய்துவரும் அன்பர்களுக்கும், வித்தியாசாலையின் வளர்ச்சிகருதி பொருளுதவி செய்துவரும் அரசாங்கத்தாருக்கும், போஷகர்களுக்கும், புத்தகங்கள், பத்திரிகைகள், சாமான்கள், நன்கொடைகள் முதலிய உதவிய அன்பர்களுக்கும் தாய்மார்களுக்கும் ஆண்டுவிழாவில் அன்பர்களுக்குக்கொடுக்க விசிறிகள் உதவிய நேமத்துப்பட்டி மு. சி. பழ. பழநியப்ப செட்டியார் அவர்களுக்கும், 18-வது ஆண்டு விழாவில் சாப்பாடு நடத்துவதற்கு வீடு உதவிய சித.ராம. குடும்பத்தாருக்கும், ஆண்டுவிழாக்களிலும், மாதக் கூட்டங்களிலும் தலைமை தாங்கிய அறிஞர்களுக்கும், விரிவுரைகள் நிகழ்த்திய அறிஞர்களுக்கும், சங்கம், வித்தியாசாலை இவைகளைப்பார்வையிட்டு நல்லுரை வழங்கிய பெரியார்களுக்கும், ஊக்கத்துடன் கல்வி போதித்துவரும் வித்தியாசாலை ஆசிரியர்களுக்கும், பிள்ளைகளைத் தினந்தோறும் தவறாது கல்விபயில அனுப்பிவரும் பெற்றோர்களுக்கும், நமது நிகழ்ச்சிகளை தாமதியாது பிரசுரித்துவரும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும், வித்தியாசாலை மாணவ மாணவிகள் விளையாடுவதற்கு இடம் தந்துதவிய பெரி. நா. வெங்கடாசலம் செட்டியாரவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மெ. சிதம்பரம்,
காரியதரிசி.

## யுத்தம்

### இதன் காரணத்தால் ஸிப்கோ தயாரிப்புகளின் விலை அதிகப்படுத்தவில்லை.

ரிட் : — ஒவ்வொரு வீட்டின் இன்றியமையாத ஊழியன். சமையல் பாத்திரங்கள், கண்ணாடிகள், மார்பிள்ஸ்டோன்கள், ஸ்நானத் தொட்டிகள், முதலிய எல்லாச் சாமான்களையும் சுகாதார முறையில் சுத்தம்செய்து பிரகாசத்தைத்தரும் பாலிஷ் பவுடர்.

காந்தி : — திரவரூபமானது. பாலிஷில் நிகரற்றது. எல்லா உலோக சாமான்களையும் பளிங்குபோல் ஜ்வலிக்கச் செய்யும்.

ஷைனல் : — துணியிலுள்ள இந்தப் பாலிஷ் உபயோகத்தில் மிக சிறந்தது. சிக்கனமானது. மோட்டாருக்கு முக்கியமானது. வெள்ளி, செம்பு, பித்தளை, நிக்கல், கெடிகாரங்கள், சைக்கிள் போன்ற எல்லா மெட்டல்களையும் சுலபமாக பாலிஷ் செய்யும். மின்னொளியைப்போல் பிரகாசிக்கும்.

பிரேமா : — பரிமள மிகுந்த டாய்லட் முகப்பவுடர்.

பினைல் : — தொத்துவியாதிகள் பரவ காரணமான கிருமி, ஈ, கொசுக்களை அறவே ஒழித்து துர்நாற்றங்களைப்போக்கி சுகாதாரத்தைப் பாதுகாக்க இன்றியமையாதது.

**ஸிப்கோ தயாரிப்புகளே குணத்தில் சிறந்தது.**

தயாரிப்பவர்கள்:—

FACTORY:

**ஸவுத் இண்டியன் பிராடக்ஸ் லிமிடெட்,**

1/131, பிராடீஸ் ரோடு மைலாப்பூர், சென்னை.

Office:— 6, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு,

ஜியார்ஜ்டவுன், சென்னை.

# ஏ. எம். சுந்தரம் அண் கோ,

## கல்லுக்கட்டி, காரைக்குடி.

திண்டுக்கல் இரும்புப்பெட்டி, பூட்டு, ஸ்டீல் டிரங்கு வகையரு, ஜெர்மன் கலர் படங்கள், சட்டம், கண்ணாடிகள் கிடைக்கும்.

குறைந்த சார்ஜில் படங்களுக்கு சட்டம் கண்ணாடி போட்டுக் கொடுக்கக்கூடும்.

---

சகல வாய்வுகளுக்கும் 110 நிர் பெருங்காய லேகியம் சஞ்சீவி போன்றது.

---

# ஸ்ரீ மீனாக்ஷி லாட்ஜ்

## சைவாள் சாப்பாட்டு ஹோட்டல்,

## கல்லுக்கட்டி வடகரை, காரைக்குடி

கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு நவீன முறையில் பொதுஜனங்களின் வேண்டுகோளின்பேரில் நடத்தி வருகிறோம்.

அன்பர்கள் அனைவரும் விஜயம்செய்து ஆதரிக்கக் கோருகிறோம்.

மண்பானை சமையல், அசல் திருப்பூர் அரிசி.

இனம் 1-க்கு ரூ. 0—3—0.

# பழனியப்பா அண்ஸன்ஸ்,

## மோட்டார் டீலர்ஸ்,

## காரைக்குடி.

---

ஐயா,

எங்களிடம் நவீன நாகரிகத்திற்கேற்ப தயார் செய்யப்பட்ட 1941 வருஷ மாடல் கிரைஸ்லர் 'வின்ஸர்', டாட்ஜ், 'லக்ஷரிலைனர்', பிளைமவுத் டீலக்ஸ் கார்கள் அபரிமிதமான சீர்திருத்தங்களுடன் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. தவிர எங்களிடம் சகலவிதமான கார்களுக்கும் ஸ்பேர் சாமான்களும் கிடைக்கும். எங்கள் ஒர்க்ஷாப்பில் ரீபோரிங், ஸ்பிரே பெயிண்டிங், வெல்டிங் முதலிய வேலைகள் கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு குறைந்த சார்ஜில் குறித்த காலத்தில் செய்துகொடுக்கப்படும்.

எங்கள் ஷோ-ரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.

ப. சி. லெ. பழனியப்ப செட்டியார்,

புரோப்ரைட்டர்,

கொத்தமங்கலம்.

குணமும், மணமும் மிகுந்த

புதுவயல்

# லெட்சுமி அண் கோ

## சோடா, கலர், கிரஷ்

பானங்களையே

வாங்கி உபயோகியுங்கள்.

---

S·V·R

SVR

POPULAR

MADE IN ENGLAND

நிபுணர்கள் பொறுக்கி எடுப்பது
நீண்டகால உழைப்புக்கும்
சிக்கனத்துக்கும்
சுக சவாரிக்கும்
நல்ல ஓட்டத்துக்கும்
பார்வைக்கும்
மறுபடி விற்க மதிப்புக்கும் ஏற்றது
எ. வி. ஆர். பாபுலர் சைக்கிள் ஒன்றுதான்!
இன்றே ஒரு எஸ் வி ஆர். பாபுலர் வாங்குங்கள்

விபரங்களுக்கு எழுதுங்கள் அல்லது நேரில் விஜயம் செய்யுங்கள்.

**எஸ். வி. ஆர். சைக்கிள் மார்ட்,**

| ஸெண்ட்ரல் ஆபீஸ்: | தலைமை ஆபீஸ்: |
|---|---|
| 2/22 பிராட்வே, | கல்லுக்கட்டி, |
| மதராஸ். | காரைக்குடி. |

பிராஞ்சுகள் } 52, நெற்குராஜ வீதி, தூத்துக்குடி.
கீழராஜவீதி, புதுக்கோட்டை.

குறைந்த சார்ஜில் சைக்கிள் ரிப்பேர்களும் செய்து கொடுக்கப்படும்

# நியூ ஸ்டூடியோ,

நிர். 8. செக்காலை ரோடு,

காரைக்குடி.

## என்லார்ஜ்மெண்டுகள்

சம்பந்தப்பட்ட சகல வேலைகளும்

உயர்ந்த முறையில்

மனத்திருப்தி அளிக்கக்கூடியதாக

செய்துகொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

1. தற்கால முறைக்கேற்ற உடுப்புகள், ஆண், பெண், சிறுவர், சிறுமியர்களுக்கும் வசதி செய்து வைத்திருக்கின்றோம்,

2. இரவு பகல் எந்தநேரத்திலும் போட்டோ எடுக்கக்கூடும்.

3. வெளியூர் ஆர்டர்களை அன்புடன் ஏற்றுக் கொள்வோம். ஆனால் பிரயாணச்சிலவு பிரத்யேகம்.

தங்களுடைய அன்பும் ஆதரவும்

கொடுத்து உதவக் கோருகின்றோம்.

M. முத்துராம்,

புரோப்ரைட்டர்.

ESTD. 1928.

சுதேசி ஓடுகளில் சிறந்த

# "குதிரை" "பவுன்"

மார்க்

## ஓடுகளையே வாங்குங்கள்

பரப்போடு, முகட்டோடு, சீலிங் ஓடு, பூக்கல்லு, காத்தோடு, கண்ணாடி ஓடு, சதுரக்கல் வகையரு சாமான்கள்

காரைக்குடியில் எல்லா மரக்கடைகளிலும்

சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

இந்திய மூலதனம்! இந்தியக் கைத்தொழில்!!



செங்கலில் சிறந்த

## மேஜை செங்கலையே

வாங்குங்கள்

8×9 இஞ்சியில் பலதினுசுகளில் சகாயமான விலைக்குக் கிடைக்குமிடம்:-

# மு. அ. ஓட்டு மில்,

முனிஸிபல் & செட்டிநாடு பாலெஸ் சப்ளையர்.

அமராவதிபுதூர்.

# "VANISH"

(Ringworm Cure)

# "வானிஷ்"

(சர்மரோக நிவாரணி)

வேனல்கட்டி, முகப்பரு, படை, புழுக்கடி, கரப்பான், பித்த வெடிப்பு, கக்கூஸ்பந்து, தேமல், சொறிசிரங்கு, பருக்கள், உதடு வெடிப்பு, கை, கால் பாதங்களில் தோல் உரிந்துபோதல் மற்றும் எல்லாவித சர்மரோகங்களுக்கும் சிறந்த ஔஷதம். இரண்டே நாளில் குணம் தரக்கூடியது.

**Prep by: Dr. V. S. S. MONI, L. M. S; M. B. H. (Cal) KARAIKUDI.**

கிடைக்குமிடம்:—

நவமணி ஸ்டோர்ஸ், புதுவயல்.
கோவாப்பிரேட்டிவ் ஸ்டோர்ஸ், கண்டனூர்.

# கணேஷ் டிரேடிங் கம்பெனி,

## டெயிலி மார்க்கட், காரைக்குடி.

எவர் சில்வர் அண்டு சில்வர் ரைட்டு சாமான்களும், ஜாப்கோ பவுண்டன் இங்க், பினயில், கம், காஸ்டராயில், ஹெயர்கிரோவர், கோக்கனட் ஆயில், விக்குவிட் பிரிலியன்டைன், ஸ்னோ பாட்டில், "501" சோப், பாப்லர் சோப், நீம் சோப், சாண்டல் சோப், கஸ் சோப், ஒண்டர் சோப் முதலியவைகளும், மைசூர் போர்சிலன் சாமான்களும், இங்கே கிடைக்கும்.

தயவுசெய்து எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்யுங்கள்.


நகரத்தார் பிரஸ், கண்டனூர்.

நீடித்த உழைப்பிற்கு
உத்திரவாதமானது

# S. RM. & Co.,

## ஜவுளிகளே!

இங்கே நீங்கள் விரும்பும்

பெங்களூர் பட்டுக்கண்டாங்கிகள்,
பாவாடைகள், உயர்தர ஜரிகை
வேஷ்டி, துப்பட்டாக்கள் மற்றும்
பலதினுசு வாயில் சேலைகளும்
இன்னும்

வனப்பு மிக்க

அநேக விதமான ஆடை,
அணிகளும், சகலவிதமான
மற்றும்பல ஜவுளிகளும் மலி
வான விலைகளில் கிடைக்கும்.

இங்கு வரும் ஒவ்வொருவரும் நம்பிக்கையும் சந்தோஷமும் மிக்க வாடிக்கைக்காரர்களாகிறர்கள். இந்த நன்மையை அடைய உங்களையும் வரவேற்கின்றோம்.

## எஸ். ஆர் எம். அண் கோ,

பட்டு ஜவுளி வர்த்தகம்,
கண்டனூர்.

# சுகமான வாழ்க்கைக்கு!

எலக்டிரிக் வசதிகள்,

எல்லாவிதமான வயரிங் சாமான்கள், 'ஸீலிங்' டேபிள் விசிறிகள், சுதேசி, இங்கிலீஷ், ஜெர்மன் பல்புகள் அழகிய லைட்பிட்டிங்குகள்

தண்ணீர் சப்ளை,

"மயர்ஸ்" தண்ணீர்ப் பம்புகள், "ஜீ. இ. ஸீ." "கிராம்டன்" மோட்டார்கள், டிபம்புசெட்டுகள்

சேர், படுக்கைக் கட்டில்கள், குழந்தைத் தொட்டில்கள் காருக்குவேண்டிய அம்போ பாட்ரி, குட்யியர்டயர்கள்

கட்டிடங்களுக்கு அவசியமான சாமான்கள்,

இரும்பு, கர்டர், வளைவுதகடு, சாதாத் தகடு, டைமன் வலை, பெயிண்ட், வார்னிஷ் சாமான்கள், பித்தளைத்தகடு, செப்புத்தகடு, கம்பிகள், குழாய்கள், அஸ்பஸ்டாஸ் பிளேன் அண்டு வளைவு தகடுகள், முதலிய எல்லாச் சாமான்களும் மிகவும் சகாயமான விலைக்கு எங்களிடம் கிடைக்கும்.

## சௌத் இந்தியா கார்ப்பரேஷன்
## (மதராஸ்) லிமிடெட்,

தந்தி:- LOTUS    காரைக்குடி.    டெலிபோன் No. 41.